**திரு. கு. காமாட்சி :** தலைவர் அவர்களே, பொதுவாகவே முகப்பு விளக்குகள் எரிவதற்கு ஒரு பேட்டரி போதுமானது. ஆனால் இப்பொழுது 2, 3 பேட்டரிகள் வைத்து அதனால் 'பிரிக்ளிங்' ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டு அதனால் திணறக்கூடிய அளவுக்கு இருக்கிறது, அதைக் கவனிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையிலேதான் இந்த விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன, நான் ஏற்கனவே சொல்லியபடி நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படும்.

**திரு. எம். தேவராசன் :** இப்பொழுது புதிதாக ஆட்டோ டிப்பர் என்று கண்டுபிடித்து இருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோமே, அதைப் பயன்படுத்த அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அது ஒரு புதிய தகவல்.

**திரு. தொ. ப. சீனிவாசன் :** தலைவர் அவர்களே, இப்படி விபத்துக்களைத் தடுப்பதற்கு நம்முடைய அரசு கவனம் செலுத்தி வருகிறது என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. லாரிகளுக்கு இப்பொழுது மஞ்சள் வர்ணம் பூசப்படுவதால் விபத்துக்கள் தடுக்கப்படுகின்றன. ஆனால் அந்த உத்தரவை இப்பொழுது தளர்த்தியிருக்கிறார்கள் என்று சொல்லப்படுவது உண்மையா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அது உண்மை இல்லை.

## *Tyres for motor vehicles*

* 88 *Q.*—THIRU N. DENNIS,
THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that there is a shortage of tyres in the open market; and

(*b*) if so, the action taken thereon?

*1974 சனவரி 22]*

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) பேருந்து, ட்ரக்குகளில் பயன்படுத்துகிற டயர்களைப் பொறுத்தவரையில் மட்டுமே பற்றாக்குறை நிலவுகிறது.

(இ) கிடைக்கும் டயர்களை சீரான முறையில் வினியோகிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

THIRU N. DENNIS : Since it is difficult to get tyres normally, will the Government take steps to sell these tyres through fair price shops?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, டயர்களுக்குரிய விலையை நிர்ணயம் செய்து ஏற்கனவே அரசாங்கம் உத்தரவுகளைப் பிறப்பித்திருக்கிறது. அதே விலையிலே தான் விற்கவேண்டுமென்று கட்டளை ஏற்கனவே டயர் விற்கின்ற விநியோகஸ்தர்களுக்குப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. கூடுதலான விலைக்கு விற்றால் தவறானதாகும்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, இந்த டயர் பற்றாக் குறையைப் போக்குவதற்கு அரசாங்கமே ஒரு தொழிற் சாலையை ஆரம்பிப்பதற்கு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, டயர் பற்றாக்குறையைப் போக்குவதற்காக மத்திய அரசாங்கத் தைப் பொறுத்தவரையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண் டிருக்கிறார்கள். தொழிற்சாலையைப் புதிதாகத் துவங்குவதைப் பற்றியோ அல்லது இருக்கின்ற தொழிற்சாலையை விரிவுபடுத்து வதைப் பற்றியோ, திட்டக் கமிஷனோ அல்லது மத்திய சர்க்காரோ தான் முடிவு செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

**திரு. எஸ். வடிவேல் :** சார், பல்லவன் போக்குவரத்திலே ஒரிஜினல் டிக்கட், டூப்ளிகேட் டிக்கட் என்று இரண்டு விதமான டிக்கட்டுகளை . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி டயர்களைப்பற்றி, உட்காருங்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்த டயர்கள் கிடைப்ப தற்கு இல்லாமல் போவதற்கு ரேட் காண்ட்ராக்ட்டும் ஒரு காரண மாக இருக்கிறது. ஆனால் வெளிமார்க்கட்டில் டயர்கள் கிடைக்

கின்றன. ரேட் காண்ட்ராக்ட் என்பதை மாற்றி நீண்ட தூர பஸ் களைப் பொறுத்தவரையிலாவது டயர்களை வாங்கிக் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : டயர்கள் விநியோகத் தைப் பொறுத்தவரையில் சரியான முறையில்லை என்பதை இந்த அரசு ஒப்புக் கொள்கிறது. தேவை அதிகமாகவும் உற்பத்திக் குறை வாகவும் இருக்கிறது. நாடு முழுவதும் ஒரே மார்க்கட் ஆகவும் இருக்கிறது. ஆகவே, மாநிலங்களில் ஓடுகின்ற வாகனங்களின் தொகைக்கு ஏற்றபடி உற்பத்தியாகிற டயர்களைப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசிடம் சொல்லியிருக்கிறோம். அப்படி அவர்கள் தந்தால் இப்படிப்பட்ட விநியோக முறையை மாநில அரசாங்கங்கள் சீர்படுத்துவதற்கும், இதிலே நடக்கிற கள்ளச் சந்தையைத் தடுப்பதற்கும் பயன்படும். ஆனால் இதைப் பற்றி போக்குவரத்து அமைச்சர்கள் மாநாட்டிலே எடுத்துச் சொல்லியுங்கூட இதுவரையிலே எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அது மட்டுமல்ல, உற்பத்தியாளர்கள் நினைத் தால் டயர்களை விற்பதில் எவ்வளவு வேண்டுமானாலும் விபரீத விளையாட்டுக்களை மேற்கொள்ளலாம் என்பதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமை.

THIRU M. A. LATHEEF : There seems to be lot of malpractices, as the Hon. Minister himself has admitted, in the distribution of tyres. The Hon. Minister stated that it has been taken up with the Central Government. Has it been done officially and if so, what is the reply? Will the Government bring some official measure to have effective control over the distribution of tyres in this State?

THE HON. THIRU S. RAMACHANDRAN : I entirely agree with the suggestion of the hon. Member. This matter has been already taken up with the Government of India, that tyres which are manufactured should be distributed according to the population of vehicles in the States. This has been represented by us very often but in spite of repeated representation the scarcity is keenly felt. But unfortunately tyres are available in some unknown or known place at higher rates. What can I do? The whole Indian economy is a black-market economy.

*1974 சனவரி 22]*

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவரவர்களே, டயர் பற்றுக் குறையின் காரணமாக அரசாங்க பஸ்கள் ஏதாவது ஓடாமல் இருக்கின்றனவா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, நம்முடைய நாட்டிலே மட்டுமல்ல, நான் அண்மையிலே செய்திப் பத்திரிகையிலே பார்த்தேன். மகாராட்டிரத்திலே பஸ்கள் ஓடாமல் கணிசமாக இருக்கின்றன என்ற செய்தியைப் பார்த்தேன். இருந்தாலும் நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இங்குள்ள டயர் கம்பெனிகளோடு நேரடிப் பேச்சு வார்த்தைகளின் மூலமாகக் கூடுமானவரையில் அந்தக் கஷ்டம் அதிகமில்லாத அளவில் பார்த்துக் கொள்கிறோம்.

*Introduction of Mini-buses*

* 89 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Government have taken a decision on the question of introducing mini-buses: and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடம் இல்லை.

**இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு வாடகைக் கார்கள் ஒதுக்கீடு**

* **90 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973 சனவரி முதல் ஆகஸ்ட் வரை இலங்கையிலிருந்து தாயகம் திரும்பி வந்துள்ள அகதிகள் எத்தனை பேர் டூரிஸ்ட் டாக்சி தொழில் நடத்துவதற்காக அம்பாசிடர் கார் ஒதுக்கித்தர வேண்டும் என மனு போட்டுள்ளனர் ?

(இ) அவர்களில் எத்தனை பேருக்குக் கார் ஒதுக்கித் தரப்பட்டுள்ளது ?

**திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) மூன்று.

(இ) மூவருக்கும் அம்பாசிடர் கார் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.